# தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், மயிலாடுதுறை

அ.சா.31 நாள் 20.11.2025

| | | | |
|---|---|---|---|
| CC. No. | 237/2025 | | |
| பெயர் | ராதிகா | த/பெ. | செல்வமணி |
| வயது | 39 | தொழில் | விவசாயம் |
| கிராமம் | நெருஞ்சிகாடு | தாலுக்கா | குடவாசல் |

(எதிரிகள் ஆஜர்,).

சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டது.

முதல் விசாரணை :-

நான் தற்போது நன்னிலத்தில் வசித்து வருகிறேன். நான் வீட்டு குடித்தனம் நடத்தி வருகிறேன். எதிரிகள் மகாலெட்சுமி, ஆரோக்கியராஜ் ஆகியோர்களை தெரியும். கடந்த 2011-ஆண்டு மயிலாடுதுறை நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலையில் மருந்தக பிரிவில் மருந்து எடுத்து கொடுக்கும் பணிக்காக ஆரோக்கியராஜும், மகாலெட்சுமியும் என்னை அழைத்தார்கள். அதன் பின்னர், நான் அங்கு மருந்தக பிரிவில் விற்பனையாளராக பணிக்கு சென்றேன். நான் மருந்துகளையும் மட்டும் எடுத்துக்கொடுப்பேன். நான் வாடிக்கையாளர் கொடுக்கும் பணத்தினை மகாலெட்சுமியிடமோ அல்லது ஆரோக்கியராஜிடமோ கொடுப்பேன் அவர்கள் மீதி தொகை இருந்தால் என்னிடம் கொடுப்பார்கள். நான் அதனை வாடிக்கையாளர்களிடம் கொடுப்பேன். பில் புக்கில் இருப்பவைகளை என்னிடம் மகாலெட்சுமி சிட்டாவில் எழுத சொல்லுவார். தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டப்பிரிவு 81-ன் கீழான விசாரணை அதிகாரியிடம் கொடுத்த வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.55** ஆகும். என்னை வணிககுற்றப்புலனாய்வு போலீசார் என்னை விசாரித்தனர்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :-

1ம் எதிரி அந்த மருந்தகத்தில் மருந்தாளராக பணிபுரிந்தார். என்னை மதிவாணன் என்ற விசாரணை அதிகாரி என்னை விசாரிக்கவில்லை.

CJM, MAYILADUTHURAI.

S. Paltik

எந்தவொரு அதிகாரியும் இந்த வழக்கு சம்மந்தமாக என்னை விசாரிக்கவில்லை. அந்த கையெழுத்து எப்போது எந்த நேரத்தில் போட்டேன் என்றால் ஞாபகம் இல்லை.

மறு விசாரணை :–

இல்லை.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்து காண்பித்து அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

தலைமை குற்றவியல் நீதிபதி,
மயிலாடுதுறை.

CJM, MAYILADUTHURAI.

## தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், மயிலாடுதுறை

அ.சா.32 நாள் 20.11.2025

| CC. No. | 237/2025 | | |
|---|---|---|---|
| பெயர் | ஜானகிராமன் | த/பெ. | திருஞானசம்மந்தம் |
| வயது | 46 | தொழில் | Sales man |
| கிராமம் | கும்பகோணம் | தாலுக்கா | கும்பகோணம் |

(எதிரிகள் ஆஜர்.).

சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டது.

முதல் விசாரணை :-

நான் தற்போது கும்பகோணம், சுந்தர பெருமாள் கோவிலில் வசித்து வருகிறேன். நான் வசந்த் ஏஜென்சி என்ற பெயரில் மருந்து மொத்த விற்பனை நிறுவனத்தை சுமார் 20 ஆண்டுகளுக்கு மேலாக வேலை செய்து வருகிறேன். எதிரிகளை தெரியும். எங்கள் நிறுவன மூலமாக மயிலாடுதுறை நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலைக்கு Surgical things அவர்கள் கேட்டால் விற்பனை செய்தேன். எங்களது நிறுவனத்திற்கு மேற்படி மயிலாடுதுறை நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலையிலிருந்து எந்தவித கொள்முதலும் திருப்பப்படவில்லை. நாங்கள் Surgical things-ற்கு பொதுவாக return எதுவும் எடுப்பதில்லை. என்னிடம் காண்பிக்கப்படும் 01.04.2010 முதல் 27.06.2014 வரையிலான காலத்திற்கு எங்களது நிறுவனம் மயிலாடுதுறை நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலையுடன் செய்த transaction Accounts history statement (எண்ணிக்கை 4 பில்கள்) எங்கள் நிறுவனத்துடையதுதான். அந்த transaction Accounts history statement (எண்ணிக்கை 4 பில்கள்) **அ.சா.ஆ.56** ஆகும். மயிலாடுதுறை நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலையில் Expiry Return Register-ல் goods returns to Medical Agency for the year 2011 to 2012 என்ற பட்டியலில் 45-வது இடத்தில் Vasanth Agency ரூ.17,110/- கொள்முதல் திருப்பம் செய்யப்படவில்லை. கொள்முதல் திருப்ப பட்டியல் **அ.சா.ஆ.57** ஆகும். என்னை தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டப்பிரிவு 81-ன் கீழான

CJM, MAYILADUTHURAI.

விசாரணை அதிகாரி என்னை விசாரித்தார். என்னிடம் காண்பிக்கப்படும் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த வாக்குமூலம் **அ.சா.ஆ.58** ஆகும். என்னை வணிகக்குற்றப்புலனாய்வு போலீசார் என்னை விசாரித்தனர்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :-

வசந்த் ஏஜென்சியின் உரிமையாளர் முருகானந்தம் ஆவார். நான் அதில் விற்பனையாளராக உள்ளேன். என்னுடன் சேர்த்து 3 மற்றும் 4 நபர்கள் விற்பனையாளராக உள்ளனர். மருந்துபொருட்கள் மற்றும் மருத்துவ உபகரணங்களை தனிநபர் மற்றும் மருத்துவமனை சென்று ஆர்டர் மூலமாக பெற்று எங்களது நிறுவனத்தின் மூலமாக விற்பனை செய்வோம். எங்களது நிறுவனத்தின் அலுவலகத்தில் மொத்தம் 6 மற்றும் 7 நபர்கள் உள்ளனர். எங்கள் நிறுவனத்தின் கோப்புகளை நாங்கள் பார்வையிட்டு பராமரித்து வருவோம். எங்கள் அலுவலகத்தில் உள்ள சப்ளை செய்ததற்கான பொருட்களின் விபரம் ஒரு பதிவேட்டில் எழுதிவைத்திருப்போம். அந்த பதிவேடு எங்கள் அலுவலகத்தில் இருக்கும்.நாங்கள் எங்கள் அலுவலகத்திற்கு மேலாளர் ஒருவரும் இருக்கிறார். அந்த பதிவேடுகள் அனைத்தையும் மேலாளர் அல்லது உரிமையாளர் தான் பராமரிப்பார். அந்த பதிவேடுகளில் உள்ள விபரம் குறித்து எனக்கு தெரியும். அந்த பதிவேடுகளை நான் போலீசாரிடம் கொடுக்கவில்லை. எங்கள் நிறுவனத்தில் காலவதியான பொருட்கள் அவ்வளவாக திரும்பப்படமாட்டாது. ஆனால், சில பொருட்கள் மட்டும் திரும்பபெறுவோம். திரும்ப பெறும் பொருட்களை மயிலாடுதுறை நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலைக்கு நாங்கள் சப்ளை செய்யவில்லை. நான் என்னென்ன பொருட்களையெல்லாம் மயிலாடுதுறை நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலைக்கு சப்ளை செய்தோம் என்ற விபரம் இந்நீதிமனற்ததில் தாக்கல் செய்யவில்லை. எங்கள் அலுவலகத்தில் உள்ளது. மயிலாடுதுறை நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலைக்கு 2011 முதல் 2014 சுமார் ரூ.1,00,000/- தொகை கொண்ட பொருட்களை சப்ளை செய்துள்ளோம். எங்கள் அலுவலகத்திலும் Expiry Return Register பராமரித்து வருகிறோம். அந்த Expiry Return Register-யை பார்த்துதான் சொன்னேன்.

CJM, MAYILADUTHURAI.

அந்த Expiry Return Register இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. Expiry Return Register –யை போலீசாரிடம் கொடுத்தேனா என்று சொன்னால் நான் சரிபார்த்துதான் சொல்லமுடியும். Expiry Return Register–யை நானும் பராமரிப்பேன் மற்றும் மேலாளரும் அதனை பராமரிப்பேன். நான் எந்தவித ஆவணத்தையும் பார்க்காமல் ஒருதலைபட்சமாக எதிரிகளின் மீது காழ்ப்புணர்ச்சி கொண்டு துறை விசாரணை அதிகாரியிடம் பொய்யான வாக்குமூலத்தை கொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை :–

இல்லை.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்து காண்பித்து அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

தலைமை குற்றவியல் நீதிபதி,
மயிலாடுதுறை.